ஞாலகுருவின் படைப்புக்கள்

# இந்துமதம் அழியுமோ?!?!

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை முன்னுரை

மற்ற நாடுகளில் மதத்தை அரசியல் தத்துவம் வென்றது போல், இந்த நாட்டில் எந்த ஓர் அரசியல் தத்துவத்தாலும் இந்துமதத்தை வெல்லவே முடியாது.... இந்துமதத்தில் கடவுளாக வழிபடப்படுபவர் அனைவருமே அரசர்களாக, அரசியல் தலைவர்களாக, அரசியல் வித்தகர்களாக, அரசியல் சிறப்புப் பெற்றவர்களாக வாழ்ந்த மானுடர்கள்தான்.




இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞாலுச்சாரியார்,

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,122 ஆவணி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ.10/-

# உள்ளுறை

1. **"அருட்கேணி நீர் மூன்றுவது குவளை"** என்ற தலைப்பில் இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை முன்னுரை 1980இல் (ஆவணி மாதத்தில்) குருதேவர் அவர்களால் எழுதப்பட்டது. இந்தச் சிறிய நூலுக்கு "இந்துமதம் அழியுமோ?" என்று மற்றொரு தலைப்பும் வழங்கப்பட்டுள்ளது. முழுமையாகக் கிடைத்த அதன் நகல் இங்கே வழங்கப்படுகின்றது.
2. **"குருதேவரின் அரிய திட்டம்"** - 31/05/1981இல் குருதேவரின் தலைமைப்பீடத்திலிருந்து திருவையாறு சித்தரடியான் துரைசாமி அவர்களுக்கு எழுதப்பட்ட அஞ்சலின் நகல். இந்த நகல் முழுமையாகக் கிடைக்கவில்லை. கிடைத்த முற்பகுதி அப்படியே இங்கே வழங்கப்படுகின்றது.
3. **"சித்தர்களின் சோதிடக்கலை"** - குருதேவர் 1972இல் உலகியலாகச் செயல்பட ஆரம்பித்த பொழுது எழுதி வழங்கிய ஒரு பக்க அறிவிக்கை.

# இந்துமதம் அழியுமோ?!?!

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை

## முன்னுரை

**ஆசிரியர்:**

**குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார்**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**

# அருட்கேணி நீர் முன்றுவது குவளை

**வழங்குபவர்:**

சித்தரடியான் சோ.இராமகிருட்டிணன்,
க.எ. 6, 4வது குறுக்குத் தெரு,
பொன்னகரம், பிராட்வே,
மதுரை - 10.

நூல் உரிமை முழுவதும் ஆசிரியர்க்கே.

**<u>கையெழுத்து நூலாக வெளியிடுபவர்:</u>**

சித்தரடியான் சோ.இராமகிருட்டிணன்.

இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை எனும் நூலின் முன்னுரையே இது. இருப்பினும் சிறப்புக் கருதி இது தனிநூலாக வெளியிடப் படுகின்றது. பொருட்தேவையை முன்னிட்டு இந்நூல் கையெழுத்து நூலாகவே பலருக்கும் அனுப்பப்படுகின்றது. விரைவில் அச்சிட்டு மலிவு விலையில் விற்கப்படும்.

**- குருவாணை.**

# அருட்கேணி நீர் மூன்றுவது குவளை

# இந்துமதம் அழியுமோ?!?!

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை முன்னுரை.

இனிய நண்பர்களே!

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமை வாழ்வுக்கும்; ஏற்றத்தாழ்வுகளும், வேறுபாடுகளும், முரண்பாடுகளும் நிறைந்த சமுதாய வாழ்வுக்கும்; தெளிவான உரிமை (rights), முறையான நீதி (justice), விடுதலை (liberty), சமத்துவம் (equality), சகோதரத்துவம் (brotherhood), ... இல்லாத அரசியல் சமுதாய இயக்கத்துக்கும் பழக்கப்பட்டுப் போன பழைய, பழைய, பழைய ... சமுதாயத்தில் பிறந்துள்ளோம் நாம்.

நம்மைப் பிளவுபடுத்த, வேற்றுமைப்படுத்த, ஒற்றுமையற்றிருக்க, உயர்வு தாழ்வு வேறுபாட்டுணர்ச்சிக்குட்பட்டிட, அடிமைப்படுத்த ... ஆற்றல்மிக்க அறிவுத் துறையினர் (intellectuals), ஆட்சி இயந்திரத் துறையினர் (officials), மத குருமார்கள், இலக்கியவாதிகள், சிற்ப ஓவிய நடிப்புக் கலைஞர்கள் ... உள்ளார்கள்.

அறியாமை, ஆராயாமை, தன்னலம், தான் தன் குடும்பம் என்ற வட்ட வெறி, சாதி வெறி, ... நம் மக்களைச் சிந்தனைத் திறன் இல்லாமல் செய்து விட்டன.

இவற்றையெல்லாம் எதிர்த்துப் போராடும் மாபெரும் பணியில் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு மேல் ஈடுபட்டு ஏட்டறிவும், பட்டறிவும் பெற்றுச் செய்வதறியாது திகைத்து மெல்ல, மெல்ல ... அடக்கமாக ... அமைதியாகப் பணியாற்றப் புறப்பட்டிருப்பவன் நான் -> எனது நண்பர்கள், தோழர்கள் நீங்கள் - எனவே, ஒருவருக்கொருவர் உதவுங்கள், ஒற்றுமையாக இருங்கள். பற்றோடும், பாசத்தோடும் உண்மையாகப் பழகுங்கள்.

நாம் மிகமிகப் பெரிய அரிய, உயரிய, சீரிய பணிகளை ஆற்றப் புறப்பட்டிருக்கிறோம். நமக்கிடையில் நல்ல பிடிப்பும், பற்றும், ஒற்றுமையும், உதவும் பண்பும், விட்டுக் கொடுக்கும் பண்பும் வளர்ந்தோங்கிடல் மிகமிக அவசியம். நான் அனைவரையும் சமமாகத்தான் கருதுகிறேன். அவரவர் ஊழ்வினை, விதி, ஆற்றல், முயற்சி, விருப்பாற்றல், சத்தி, ... முதலியவற்றிற்கேற்ப பட்டங்களும், திட்டங்களும் பெற்றுச் செயல் புரிகின்றீர்கள். மற்றபடி உங்களுக்குள் உயர்வு தாழ்வோ, வேறுபாடோ ஏதுமில்லை. இவற்றை நீங்கள் என்றென்றும் நன்கு நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் சிலரே! ஆனால் சிறந்தவராகத் தயாராவோம். காட்டில் சிங்கங்கள் சிலவே. ஆனால், அவைதான் ஆட்சி செலுத்துகின்றன. நாம் நாட்டில் சிங்கங்களாக ஆட்சி செலுத்துவோம். “காந்தியின் வழியே நம் வழி”. (Gandhiism is our policy and principle). நாம் ஒன்றுபடுவோம். வென்று உயர்வோம்.

நாம் தனிமனித வாழ்வு செப்பமடைய! குடும்ப வாழ்வு வளமடைய! சமுதாய உறவுமுறை வலிமையடைய! அரசியல் உரிமை, பெருமை பெற்றிட! உண்மையும், திண்மையும், நன்மையும், ... உடைய ஒரு மாபெரும் பழம்பெரும் தத்துவத்தை மீண்டும் செயலுக்குக் கொண்டுவரவே பாடுபடுகிறோம்.

நான், ‘பண்பாட்டுப் புரட்சி’ (cultural revolution) செய்யப் புறப்படவில்லை. நாம் செய்வதெல்லாம் பண்பாட்டு வீழ்ச்சியைச் சரிக்கட்டிப் பண்பாட்டு மறுமலர்ச்சியை (Renaissance of the Ancient Culture) உருவாக்கும் முயற்சிதான். எனவே நமது இயக்கம் ‘ஒரு பண்பாட்டு நடவடிக்கை இயக்கம்’தான். (The work we have undertaken is only a cultural activity.) இதில் தமிழினம் முதன்மை பெற்றுத் தலைமை தாங்கும்; பிறகு, இந்தியாவில் உள்ள பல்வேறு இனங்களும் இதில் பங்கு பெறும். அதன்பிறகு இது உலகுக்குப் “பண்பாட்டு அடிப்படைதான் மனித இனத்தைக் காக்கும், வளர்க்கும்” (The Siddharism will practically explain that the ‘cultural base’ can alone safeguard and aid for the growth of manhood) என்ற பேருண்மையை விளக்கி அனைத்துலகையும் தன்பால் ஈர்த்து இணைத்து வழிநடத்தும்.

நண்பர்களே! விளையாட்டுப் போக்கில் அலைகடலில் மூழ்கி முத்தெடுக்கும் கலையில் வித்தகர்களாக உருவாகி விட்டீர்கள். உங்களது வெற்றிகளால் நிலையான முத்திரைகள் மானுட இன வளர்ச்சி வரலாற்றில் பதிக்கப்பட்டே தீரும். வெறும் பொருளாதார சமத்துவம், அறிவுலக வளர்ச்சி மனிதர்களை நிறைவுக்கும், நிம்மதிக்கும் உரியவர்களாக ஆக்கிடவே முடியாது.

மிகமிகப் பெரிய ஈகங்களைச் (தியாகம் Sacrifice) செய்துதான் பன்னெடுங்காலமாக இழிந்தும், அழிந்தும், நலிந்தும் ... கிடக்கும் நமது மக்களைக் காக்க முடியும். இவர்கள் நல்லவர்கள், அப்பாவிகள், கள்ளங்கபடமற்றவர்கள், நல்ல உழைப்பாளிகள். ஆனால், இவர்கள் காலம் காலமாக ஏமாற்றப்படுகிறார்கள்,

அறியாமையில் ஆழ்த்தப்படுகிறார்கள், பிரிவினை வேறுபாடுகளால் தாழ்த்தப்படுகிறார்கள்.

எந்தக் கடவுளும், கடவுள் நெறியும், மதமும், ... மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு பாராட்டுவதையும்; மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவதையும்; மனிதனை மனிதன் அடக்கியாள்வதையும் ஒப்புக் கொள்ளவில்லை, நியாயப்படுத்தவில்லை (அமுல்படுத்தவில்லை), செயலாக்கவில்லை. ஆனால் நாத்திகர், பகுத்தறிவுவாதிகள் இப்படியொரு குறையை, குற்றச்சாட்டைத் தொடர்ந்து மதத்தின் மீது சுமத்தி வருகின்றார்கள். இன்னும் சொல்லப் போனால், மதம் அறிவியல் வளர்ச்சியைத் தடுக்கிறது, புதிய சிந்தனைக்கு முட்டுக்கட்டை போடுகிறது, மதம் அறியாமையை, மூடநம்பிக்கையை வளர்க்கிறது, ... என்றெல்லாம் கூட மதத்தின் மீது பழி சுமத்தப்படுகின்றது.

இவற்றை மதவாதிகள் மறுத்து கருத்துத் தெரிவிக்காமைக்குக் காரணம்; சில மதங்களின் கொள்கைகளும், நடைமுறைகளும் காலப்போக்கில் விளக்கியுரைத்து அறிவியல் உலகு புரிந்து கொள்ளச் செய்யமுடியாத நிலையை அடைந்து விட்டன. அத்துடன் மதத்தைச் செயலாக்கும் பூசாறிகள், குருக்கள்கள், குருமார்கள், மடாதிபதிகள், அருளாளர்கள், மதக்கலைஞர்கள், ... முதலியோர் மதத்துறையில் தங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்ளத் தவறி விடுகிறார்கள்.

ஒரு சிலர் மதத் தத்துவங்களிலும், புராண இதிகாசங்களிலும் நல்ல புலமை போதுமான அளவு பெற்றிருந்த போதும், அதற்கு வரலாற்றுப் பின்னணியும் (A historical approach about the religious background), அறிவியல் கண்ணோட்டமும் (a scientific attitude and approach) தர முடியாத பழமைவாதிகளாக

உள்ளனர். இக்குறைபாடுகள் மத மறுப்புக்கும், எதிர்ப்புக்கும் (The denial and opposition of the religion) பெருத்த வலிமையை வழங்கிவிட்டன. எனவே நம் காலத்தில் ஒரு தெளிவான முடிவு (to take a clear and finite decision) எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதாவது, மதம் நம் நாட்டுக்குத் தேவையா? இல்லையா? அல்லது மதத்தால் நம் நாட்டுக்கு நன்மை உண்டா? இல்லையா? - என்ற ஆய்வில் நாம் நடுநிலையில் நின்று முறையாகவும், முழுமையாகவும் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம் நாட்டுச் சமய சமுதாய அரசியல் வரலாற்றில் போதுமான அளவு 'பொருள்முதல்வாதம்' (Materialism) - நாத்திகம் (atheism) எனும் மத மறுப்புத் தத்துவங்களில் புலமையும்; அதே அளவு 'உயிர்முதல்வாதம்' (spiritualism) - ஆத்திகம் (theism) எனும் மத விருப்புத் தத்துவங்களில் புலமையும், நடுநிலைச் சிந்தனையும், ஆராய்ச்சிப் போக்கும் உடையவர்கள் அதிகமாகத் தோன்றவில்லை. தோன்றியவர்களும் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பணியில் ஈடுபடவில்லை. எனவே இப்போது அறிவியல் துறையினராக உள்ள நாம்தான் அவ்வரிய பணியில் ஈடுபட்டிடல் வேண்டும். நமக்கு எந்த ஒரு மதத்திடமும் வேறுபாடோ! பகைமையோ! இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை. அதே நேரத்து உலக வரலாறு தரும் முடிவுகளை அல்லது பேருண்மைகளை ஒப்புக் கொண்டு உணர்ந்துதான் செயல்பட வேண்டும் நாம்.

காரல் மார்க்சின் மதமறுப்புத் தத்துவம் இவ்வுலகின் பெரும்பகுதியில் ஆட்சிக்கு வந்துவிட்டது. அதாவது, உலகின் பெரும்பகுதியில் இருந்த மதங்கள் வெல்லப்பட்டு விட்டன.

இப்படி வெல்லப்பட்ட மதங்கள் கிறித்துவம், புத்தம், இசுலாம், ... முதலியன. ஆனுல், இம்மதங்கள் எல்லாம் அந்தந்த நாட்டில் இருந்த பழம்பெரும் ஆதிமதங்களே வென்று ஆட்சி பெற்றவை. இப்போது அவை வெல்லப்பட்டுள்ளன. அதாவது வென்றவை வெல்லப்பட்டுள்ளன. ஆனுல், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள இந்துமதம் இதுவரை எந்த ஒரு மதத்தாலும் வெல்லப்படவே இல்லை. அதுமட்டுமல்ல, இன்று இந்துமதம் வேறு எந்த மதத்தையும் வென்று ஆட்சிக்கு வந்த மதமும் அல்ல. **இந்த மதம் இந்த நாட்டின் சொந்த மதம், ஆதி மதம், பழம்பெரும் மதம்.** இதற்கு முந்தி எந்த மதமும் இந்தியாவை ஆட்சி செய்ய முடியாது. எனவே, இந்துமதத்தைக் காரல் மார்க்சின் கடவுள் மறுப்புத் தத்துவம் ஒருக்காலும் வெல்ல முடியாது. இப்பேருண்மையை எண்ணிப் பாராமல் மார்க்சீயவாதிகள் மார்தட்டிக் கொண்டு இந்துமதத்தை எதிர்த்துப் போர்க்கோலம் பூண்டு, போர்க்களம் புகுந்து போராடிக் கொண்டே இருக்கிருர்கள். அவர்களின் காலம் போர்க்களத்திலேயே முடியும்; போரின் தன்மையும், முறையும், நிலவரமும், முடிவு பற்றிய கணிப்பும் இன்றிப் போராடுபவர்களே இவர்கள்.

இவர்களுக்கு முன்பே இந்நாட்டினுள் புகுந்து விட்ட இசுலாமும், கிறித்துவமும் இந்துமதத்தை எதிர்த்துப் பல்வேறு போர்த் தந்திறங்களையும், முறைகளையும், களங்களையும் பயன்படுத்திப் போராடி வருகிருர்கள். ஆனுல், இவர்கள் கடவுள் மறுப்பாளர்களோ! மத வெறுப்பாளர்களோ! அல்ல! எனவே, இப்போர் மதங்களுக்கிடையில் நடக்கும் போரேயாகும். இருப்பினும் நடந்து வரும் போரில் ஆதாயம் தேட முற்பட்டிடுபவர்களாக மார்க்சீயவாதிகளும், பெரியார் ஈ.வெ.ரா.வின் சார்பாளர்களும்

இருந்து வருகிறார்கள். எனவேதான், இவர்களிருவருமே இந்த நாட்டிலுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும், ஏமாற்றுக்களையும், சுரண்டல்களையும் பற்றி அதிக அக்கரையோ, ஆர்வமோ காட்டவில்லை. இதனால், இவர்கள் இந்நாட்டின் உயிர்நாடியான சிக்கல்களைத் தொடாமலேயே வெறும் மேடைப்பேச்சு அரசியல், மேடைப்பேச்சுச் சீர்திருத்தம், மேடைப்பேச்சுப் புரட்சி ... முதலியவற்றை நடத்தி விளையாட்டிலும், விழாவிலும் வாழ்வை நடத்தி வருகின்றார்கள்.

இந்துமதம் இந்த உலகில் தோன்றிய முதல்மதம், ஆதிமதம். இந்த மதம் எந்த வரலாற்றுக் கணக்கீட்டுக்கும் உட்படாத, அகப்படாத, விரிந்து பரந்து நீண்ட மாபெரும் காலப்பழமையை உடையது. (The Induism is the first religion of this earth. And it is the ancient religion of this earth. The Induism is the pre-historic religion. No chronological dates can estimate its age.) இந்த இந்துமதத்தை இரசியாவில் லெனின் செயல்பட்டது போலவும், யாரேனும் ஒருவர் செயல்பட்டு வென்று, அடக்கி, நலிவுபடுத்தி அப்புறப்படுத்திட முடியும் என்று கருதினால் அது பகற்கனவாகவே முடியும்! முடியும்!! முடியும்!!! **இந்த இந்துமதத்தை வெல்லத் தனியொரு தத்துவம் இதுவரை இவ்வுலகில் பிறக்கவில்லை. இனிப் பிறக்கவும் முடியாது.**

இப்படி நான் கூறுவதை ஏதோ மத**வெ**றியால் கண்மூடித்தனமாகக் கூறுவதாக யாரும் நினைக்கத் தேவையில்லை. நான் மத**நெ**றியில் நின்று, மிகுந்த நிதானத்துடன், நல்ல விழிப்புணர்வுடன்தான் இப்படியெல்லாம் கூறுகின்றேன். ஏனெனில், ... மற்ற மதங்களைப் போல் இந்துமதம் தனியொரு மனிதனால் தோற்றுவிக்கப்பட்டதுமல்ல! குறிக்கப்பட்ட கால எல்லைக்குள்

தோன்றிய மதமுமல்ல! குறிப்பிட்ட ஒரு கடவுளேயோ, நூலேயோ மூலமாகக் கொண்டதுமல்ல! கடவுளே முதலாளியாக, சர்வாதிகாரியாக, பேரரசஞகக் கருதும் தத்துவமுடையதுமல்ல! தனியொரு கோவிலேயோ, தனித்தவோர் இடத்தையோ மதத்தின் பிறப்பிடமாகக் கொண்டதுமல்ல! இம்மதமெனும் மரத்தின் எல்லா வேர்களும் ஆணிவேர்களே! இம்மதத்தின் கிளேகளோ எண்ணமுடியாத அளவு தொன்மை வாய்ந்த ஆலமரத்தின் விழுதுகளும் எண்ணற்ற மரங்களானது போல் கணிக்க முடியா அளவு பெருகியுள்ளன. எனவே, <u>மற்ற நாடுகளில் மதத்தை அரசியல் தத்துவம் வென்றது போல், இந்த நாட்டில் எந்த ஓர் அரசியல் தத்துவத்தாலும் இந்துமதத்தை வெல்லவே முடியாது</u>.

இன்னும் சிறப்பாகக் கூற வேண்டுமேயாஞல், **இந்துமதம் ஏற்கனவே ஓர் அரசியல் தத்துவமாக விளங்குகின்றது. இந்துமதத்தில் கடவுளாக வழிபடப்படுபவர் அனேவருமே அரசர்களாக, அரசியல் தலேவர்களாக, அரசியல் வித்தகர்களாக, அரசியல் சிறப்புப் பெற்றவர்களாக வாழ்ந்த மானுடர்கள்தான். இம்மானுடர்கள் ஊழால், விதியால், வினேயால், சாதனேயால் ... கடவுளாக உயர்ந்தவர்களே. இவர்கள், இந்துமதத்தின் செயல்வடிவமாகத் திகழ்பவர்கள்.** எனவே, இந்துமதம் ஒரு கற்பனேயோ! கனவோ! கதையோ! காலப்போக்கில் உருவான புராணமோ அல்ல! அல்ல! அல்ல! இந்துமதம் முழுக்க முழுக்க ஓர் அநுபவச் சித்தாந்தம். (The Induism is a practical philosophy. It is not an imagination or a dream or a story or a legend). எனவே, இந்த அநுபவச் சித்தாந்தத்தை எந்த ஒரு தனிமனிதனின் தத்துவமோ! முயற்சியோ! வெற்றி கொள்வது அரிதினும் அரிதாம்.

இந்துமதம் இந்தியத் துணைக்கண்டத்தில் மனித இனம் தோன்றிய வரலாற்றுக் காலத்துக்கும் முந்திய பழமையுடையது. ஏனெனில், இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் விண்வெளியில் உள்ள கோள்களில் வாழ்பவர்களைச் சேர்ந்தவர்கள். இவர்களே இந்துமதத்தின் தத்துவத்தையும், செயல் சித்தாந்தத்தையும், வழிபாட்டு நிலையங்களையும், வழிபடு முறைகளையும், பிற சாத்திறங்களையும், சடங்குகளையும், சம்பிறதாயங்களையும் உருவாக்கியவர்கள். எனவே, இவர்களையும், இவர்களது சாதனைகளையும் தெரிய, அறிய, புரிய, தெளிய, உணர, ... முற்படுதலே இந்துமதத்தை முழுமையாக ஏற்கவோ, தெரிவிக்கவோ தேவையான சத்தியை வழங்கிடும்.

இந்த வரலாற்றுப் பேருண்மையை உணர முடியாதவர்கள், உணரத் தெரியாதவர்கள், ... இந்து மதத்தை வெறுக்கவும், மறுக்கவும், எதிர்க்கவும் புறப்பட்டிட்டார்கள். இவர்கள் ‘இந்து’ என்ற சொல் இந்திய மொழிகளுக்கு உரியதா? இந்துமதம் இந்தியாவுக்கே உரியதா? இந்துமதம் எப்போதாவது அரசாங்க மதமாக ஆட்சியில் இருந்ததா? இந்துமதம் இந்தியா முழுவதும் பரவியுள்ள ஒரு மதமா? இந்துமதம் மற்ற மதங்களால் வெல்லப்பட்டதா? இந்துமதம் தனது செல்வாக்கை இழந்து விட்டதா? ... என்ற தேவையற்ற, பயனற்ற ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களின் செயல் அநுதாபத்துக்கும், பரிதாபத்துக்கும் உரியதாகும்.

இந்தியாவின் நடப்பில் இருந்து வரும் மதம் மிகத் தொன்மையானது. இதன் தோற்றமும், வளர்ச்சியும் வரலாற்றுக் காலக்கணக்கீடுகளுக்கு எட்டாதவை, அப்பாற்பட்டவை. இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள அனைத்து மொழியினங்களும் ஒப்புக்கொண்டு

நடைமுறையில் இருந்து வரும் ஒரே மதம் இந்துமதம். சாத்திரச் சடங்குகளும், சம்பிறதாயங்களும் ஆங்காங்கே ஒரு சில சிறுசிறு மாறுதல்களைப் பெற்றிருந்த போதிலும் இந்துமதம் என்ற பெயருக்கேற்ற கட்டுக்கோப்பும், செயல்பாட்டு ஒழுங்குமுறையும், நிறுவன நிர்வாக இயங்கு முறையும், அடிப்படைத் தத்துவக் கோட்பாடும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன.

'இந்தியா' என்ற சொல் இந்தப் பாரத நாட்டுக்கு, நாவலந்தீவுக்கு, ... குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கும் நிலப்பரப்புக்கு எப்போது ஏற்பட்டதோ! அப்போதுதான் இந்த நாட்டிலிருந்த 'சித்தர் நெறி', 'சித்தர் மதம்', 'சித்தர் சமயம்', 'சிவ மதம்', 'சைவ சமயம்' என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த மதம் 'இந்துமதம்' என்ற பெயரைப் பெற்றிட்டது. எனவே, **'இந்து' என்ற சொல்லுக்கும் முந்திய மதமே இந்துமதம்**.

பலர் ஆரியர்களின் வேத மதமே இந்துமதம் என்ற தவறான கருத்தைப் பெற்றிடுகின்றார்கள். இது மாபெரும் தவறு. பிழைகளுக்கெல்லாம் தலையான பிழை. இதனால்தான் சிலர் இந்துமதத்தையே அழித்தொழித்து விட முடியும் ... என்ற அற்ப அவசர முடிவில் செயல்பட ஆரம்பித்திடுகின்றார்கள். இவர்கள் வேதத்தையும், வேத நாகரீகத்தையும், ஆரியர்களையும், ஆரியர்களின் வாழ்வியல்களையும் தாக்கித் தூக்கியெறியவும், தகர்க்கவும் முற்படுவதன் மூலம் இந்துமதத்தையே சீர்குலைத்துச் சிதைப்பதாக எண்ணிடுகின்றார்கள். இப்படி எண்ணிச் செயல்படுவதுதான் இந்தியப் பொதுவுடமை இயக்கம், நாத்திக இயக்கம், பகுத்தறிவு இயக்கம், ... முதலியவை. இவைகளெல்லாம் தொடர்ந்து ஒரே மாதிரியான, நிலையான தோல்வியையே அடைந்து

விடுகின்றன. இருந்தும் இவை தங்களது போக்கையோ, நோக்கையோ இதுகாறும் மாற்றிக் கொள்ளவே இல்லை.

இங்கு சில உள்நாட்டினரும், பல வெளிநாட்டினரும் சங்கராச்சாரியார்தான் இந்துமதத்தைத் தோற்றுவித்தார் என்று கருதுகின்றனர். கி.பி.7ஆம் நூற்றுண்டில் தோன்றிய சங்கராச்சாரியாருக்கு முன்பே இந்தியாவெங்கும் ஆயிரக்கணக்கான கோயில்களும், வழிபாட்டு முறைகளும், விழாக்களும், சடங்குகளும், ... இவற்றிற்குரிய சாத்திறங்களும், தோத்திறங்களும், சூத்திறங்களும், பூசாவிதிகளும், குருவாசகங்களும், திருவாசகங்களும், திருமந்திறங்களும், எந்திற நூல்களும், தேவாரங்களும், பாசுரங்களும், ... தோன்றிவிட்டன. **எனவே, சங்கராச்சாரியார் இந்துமதத்தைத் தோற்றுவித்தார் என்ற கருத்தோ, சங்கராச்சாரியார் போற்றும் வேதநெறிதான் இந்துமதம் என்பதோ மாபெரும் தவறுன, முறைகேடான கருத்தாகும்.** எனவே, இந்துமதம் என்ருல் சங்கராச்சாரியார்தான் என்ற கருத்தால் பலர் இந்து மதத்தை எளிதில் தாக்கித் தகர்க்க முடியுமென்ற தவருன கருத்தில் இனிமேலும் செயல்படாத நிலையேற்படல் வேண்டும்.

இந்துமதத்தைப் பிற மதங்கள் வென்றிட்டனவா? என்ற கேள்விக்கே இடமில்லை. ஏறத்தாழ இந்தியாவுக்குள் நுழைந்த எல்லா வெளிநாட்டு மதங்களுக்குள்ளும் இந்துமதத்தின் தத்துவம், நடைமுறை, நம்பிக்கை, பழக்க வழக்கம், ... முதலியவை மிகுந்த அளவு ஊடுருவிச் செழிப்பும், செல்வாக்கும் பெற்று விட்டன. ஆனுல், இந்துமதம் எந்த மதத்தையும் எதிர்த்துப் போரிட்டு அழிக்கும் முயற்சியில் ஈடுபடும் நோக்கோ, போக்கோ அற்ற மதம் என்பதால்; மற்ற மதங்களைத் தன்மயமாக்கித் தன்னுடைய கிளையாக ஆக்கிக் கொண்டிருக்கின்றது. அத்துடன்

இந்துமதம்தான் இந்த உலகில் தோன்றி இதுகாறும் அழியாத, அழிக்கப்பட முடியாத மிகமிகத் தொன்மையான ஒரே ஒரு உலக மதம் என்பதால்; இது பிற மதங்கள் பற்றிய சிந்தனையோ, நிந்தனையோ இல்லாத ஒரு பண்பட்ட மதமாக இருக்கின்றது. எனவே, இந்துமதத்துக்கும், பிற மதங்களுக்கும் போரே கிடையாது என்கின்ற போது பிற மதங்கள் எப்படி இந்துமதத்தை வென்றிட முடியும்.

இந்தியாவில் பல மதத்தவர்களும் வாழ்கின்றார்கள் என்றால்; மற்ற மதத்தவர்கள் மீண்டும் இந்துமதத்தில் சேரும் வாய்ப்பு வசதிகளும், வழிமுறைகளும் மிகமிகக் குறைவு. அத்துடன் இந்துமதத்தவர்களில் மற்ற மதத்தவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அக்கரையோ, ஆர்வமோ இல்லாதவர்களே அதிகம். ஏனெனில் ‘முன்வினைப் பயனால்’, ‘ஊழ்வினையால்’, ‘பழம்பிறப்புக்களின் பாவ புண்ணியங்களால்’ - தான் இப்பிறப்பின் வாழ்க்கை அமைகிறது என்ற கருத்தே இந்துமதத்தில் மேலோங்கியிருக்கிறது. இதனால் மதம் மாறுவதோ! மதத்தில் சேருவதோ! அவரவர் விருப்பம் என்ற சுதந்திர உணர்வு இந்துக்களிடையே செழித்துச் செயலாகி வருகின்றது.

அரசியல் காரணங்களால்தான் பெரும்பாலும் இந்துக்கள் பிற மதத்தவர்களோடு முரண்பட, சண்டையிட, போரிட நேரிட்டிருக்கின்றது என்ற பேருண்மை வரலாற்றில் தெளிவாகக் காணக் கிடைக்கின்றது. அத்துடன் பிற மதங்கள் இங்கு பரவ ஆரம்பித்தது அவற்றின் சிறப்பாலோ, பயனாலோ அல்ல! அல்ல! அல்ல! இந்த நாட்டில் அமைந்திட்ட அன்னிய ஆட்சிகளே அன்னிய மதங்கள் வேரூன்றி வளரக் காரணம். அத்துடன், இந்திய மக்கள் புதுமையை எப்போதும், எதிலும், எவ்வடிவிலும்

விரும்பி ஏற்கும் பண்புள்ளவர்கள் என்பதும் ஒரு முதன்மையான காரணமாகும். எனவே, இந்தியாவில் பிற மதங்கள் புகுந்து வளர்ந்திட்டதற்கு அச்சுறுத்தலும், இச்சகம் பேசுதலும்; தாராளமாகப் பொருளுதவியும், பிற வசதிவாய்ப்புக்களும் வழங்கப்படுதலுமே முதன்மையான காரணங்கள். எனவே, இந்துமதம் தோற்கடிக்கப்பட்டதாகவோ! பிற மதங்கள் வெற்றி பெற்றதாகவோ கருதத் தேவையில்லை.

இந்திய மக்களின் வறுமையும், அறியாமையும், அப்பாவிப் பண்பும், புதுமை நாட்டமுமே பிற மதங்கள் இந்தியாவில் வேரூன்றி வளர்வதற்குக் காரணம். இருந்த போதிலும், பிற மதங்கள் இந்துமதத்தினுள் ஊடுருவல் செய்து தனது செல்வாக்கை முத்திரைகளாகப் பதிக்க முடியவே இல்லை. இது இந்துமதத்தின் தொன்மை, வன்மை, மேன்மை, நுண்மை, உண்மை, ... முதலிய அரிய பெரிய பண்புகளையே விளக்குகின்றது. மேலும், இந்துமதம் இந்தியாவுக்குள் புகுந்து வளர்ந்த எல்லா மதங்களுக்குள்ளும் ஊடுருவல் செய்து தனது செல்வாக்கைச் செழிப்பாக்கிக் கொண்டிருப்பதால் இதனைத் தெளிவாக உணர முடியும்.

இந்துமதத்தை நாத்திகவாதிகள் வென்றிடப் பெருமுயற்சிகள் செய்து வருகின்றார்கள். இவர்கள், இந்துமதத்தை ஓரளவு கூடச் சரியாகத் தெரிந்து கொள்ளாதவர்கள். ஏனெனில், பதினெண்சித்தர்களை விடப் பெரிய நாத்திகவாதிகள் இதுவரை தோன்றியதில்லை! இனியும் தோன்ற முடியாது. எனவே, மிகச் சிறந்த நாத்திகவாதிகளான பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், பலவகைப்பட்ட சித்தர்களும் உருவாக்கிய இந்துமதத்தில் நாத்திகவாதமும் ஓர் அங்கமாகும். அதனால்,

என்றென்றும் நாத்திகவாதிகளால் இந்துமதத்தைச் சிதைக்கவோ, சீரழிக்கவோ, அழிக்கவோ முடியாது! முடியவே முடியாது!

இந்துமதத்தைப் பகுத்தறிவுவாதிகள் தொடர்ந்து சிதைக்க, சீரழிக்க முயற்சித்துப் பார்த்து வருகிறுர்கள். ஆனுல், எவருமே எள்முனையளவு கூட எதிர்பார்த்த வெற்றியினைப் பெறவே இல்லை. இருந்தும் இந்த தோல்விகளை எண்ணிப் பாராமலேயே இறுமாப்புடன் சில பகுத்தறிவுவாதிகள் காலம்தோறும் இந்து மதத்தை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டுதான் வருகிறுர்கள். இவர்கள், இந்துமதத்தைத் தோற்றுவித்து, வளர்த்துக் காத்து வருபவர்களையும்; அவர்தம் தத்துவங்களையும், தத்துவச் சாதனைகளையும் உணர முடியாமலும் இருப்பவர்களாவார்கள்.

இந்துமதத்தின் ஆரம்பமாகவும், உள்ளீடாகவும், உடலாகவும், உயிர்மூச்சாகவும் இருப்பவர்கள் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், பல்வேறு வகைப்பட்ட சித்தர்களுமாவர். இவர்கள் மிகச் சிறந்த பகுத்தறிவுவாதிகள் (Rationalists), அறிவியல்வாதிகள் (Scientists), புரட்சிவாதிகள் (Revolutionists), முற்போக்கு மாற்றவாதிகள் (Radicalists). எனவே, இவர்கள் வகுத்த தத்துவமும், செயல்வடிவமும் இணைந்த இந்துமதத்தை எந்த ஒரு பகுத்தறிவுவாதமோ, பகுத்தறிவுவாதியோ வெல்லவே முடியாது. வேண்டுமானுல், பகுத்தறிவுவாதிகள் பல வேதங்களை இந்துமதத்திடமிருந்து கற்றுக் கொள்ளலாம்.

இந்துமதம் தனக்காக வக்காலத்து வாங்கிப் பேசக் கூடியவர்களைத் தொடர்ந்து பெறுவதில்லை. இந்துக்களாக வாழ்பவர்கள் தங்களுடைய மதத்தின் அருமைபெருமைகளை எண்ணிப் பார்க்கும் ஆர்வமும், ஆற்றலும், அவசியமும் அற்றவர்களாகவே வாழ்ந்திடுகின்றுர்கள். அத்துடன் இந்துக்கள்

யார் எப்படி இந்துமதத்தைத் தாக்கினாலும் அதைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டு அமைதியாக வாழும் பண்புடையவர்களாகவே இருந்து வருகின்றார்கள். எனவேதான், இந்துமதம் மாபெரும் தாக்குதல்களுக்கெல்லாம் ஆளாக நேரிட்டு விட்டது. இருந்தபோதும், தாக்குதல்களைத் தாங்கி எதையும் சமாளிக்கும் ஆற்றல் இந்துக்களுக்கு ஏற்பட்டு விட்டது.

இந்த இருபதாம் நூற்றாண்டில் உலகமெங்கும் அரசியல் தத்துவத்தில் மாபெரும் புரட்சிநிறை மாறுதல், மார்க்சீய அடிப்படையில் ஏற்பட்டுக் கொண்டே இருப்பதால்; இந்தியாவிலும் அப்படிப்பட்டதொரு அரசியல் மாறுதல் ஏற்படுமென்று பெரும்பாலானவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால், அது இயலாத ஒன்றாகும். ஏனெனில், பதினெண்சித்தர்கள் மார்க்சீயச் சமத்துவப் பொதுவுடைமைச் சித்தாந்தத்தைவிடப் பன்மடங்கு மேம்பட்ட சமத்துவச் சகோதரத்துவப் பொதுவுடைமைச் சித்தாந்தத்தையே இந்துமதமெனும் அநுபவச் சித்தாந்தமாகப் படைத்துள்ளனர். எனவே, இந்துமதத்தை எதிர்த்துத் தகர்த்திட மார்க்சீயச் சித்தாந்தம் வல்லமையற்றதாக உள்ளது. இதனை உணராத மார்க்சீயச் சித்தாந்திகள் இந்துமதத்தைக் கடுமையாக விமர்சிக்க முற்படுகின்றார்கள். ஆனால், அவர்கள் தெரிந்து வைத்திருக்கும் இந்துமதம் உண்மையான இந்துமதத்தின் ஆயிரத்திலொரு பங்கு கூட அல்ல.

இந்துமதம் ஏட்டில் எழுதப்படாத எண்ணற்ற மறைகளையும், குறிப்பிட்ட குடும்பத்தார் மட்டும் பரம்பரை பரம்பரையாக அறிந்து வரும் முறைகளையும், நெறிகளையும், வேதங்களையும், ஆகமங்களையும், நூல்களையும், விதிகளையும், தோத்திறங்களையும், சாத்திறங்களையும், ஓச்சுக்களையும், ... உடைய ஓர் ஒப்பற்ற

மதம். எனவே, இந்துமதத்திலுள்ள பதினெண்சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்புகள், பலவகைப்பட்ட சித்தர்கள், குருமார்கள், பூசாறிகள், அருளாளிகள், மருளாளிகள், பீடங்கள், மடங்கள், இருக்கைகள், அமளிகைகள், ஆதீனங்கள், சன்னிதானங்கள் முதலியோர் பாதுகாத்துப் பேணிப் போற்றி வருபவைகளைத் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, உணர்ந்து, தெளிந்து ... தயாராகிடுபவர்களால் செய்யப்படும் விமர்சனங்களால்தான் உண்மையான பயன் உருவாகிடும். அத்தகு வித்தகர்கள் விமரிசனம் வியத்தகு பயனை நல்குமேயானாலும், அது இந்துமதத்தின் நலிவை நாடாது; பொலிவையே நாடிடும்.

பதினெண்சித்தர்களின் வாரிசுகளும், அவர்களால் படைக்கப்பட்ட நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு தகுதியுடைய அருளாளர்களின் வாரிசுகளும் வாழையடி வாழையெனத் தொடர்ந்து தோன்றிக் கொண்டே வருவதால்; இந்துமதம் இயற்கையோடு இணைந்து என்றும் நின்று நிலவும் இறவா நிலையையும், மறவா நிலையையும், மாறா நிலையையும் பெற்றுத் திகழ்கின்றது. இப்பேருண்மைகளை இவ்வையகத்திலுள்ளோர்கள் உணரும்படிச் செய்வதற்கு முன்னால்; முதலில் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள இந்துக்கள் உணரும்படிச் செய்ய வேண்டும். ஏனெனில், காலப்போக்கில் கலைவடிவில் பிறந்த சில கற்பனைகளையும், கதைகளையும், சடங்குகளையும், நம்பிக்கைகளையும் இந்துமதமென்று தவறாகக் கருதும் தன்மையை இந்துக்களிடமிருந்து உடனடியாக அகற்றிடல் வேண்டும். இந்துமதம் என்பது நடைமுறையில் வாழும் வெறும் மந்திற, தந்திற மாயங்களும், பழக்கவழக்கங்களும், கதைகளும் மட்டுமேயல்ல. இந்துமதம் மிகமிகத் தொன்மையும், வரலாற்றுப் பழமையும், மேம்பட்ட பண்பாட்டுச் சிறப்பும், உயரிய நாகரீகப் புகழும்,

ஆழமான தத்துவக் கோட்பாடும், நேரியக் கட்டுப்பாடும், நிறைந்த சாத்திறமும் உடைய ஒன்ருகும்.

இந்த இந்துமதம் பிற மதங்கள் அனைத்தையும் அரவணைத்துச் செல்லும் ஆன்மீக வலிமையும், வேதாகம வளமும், மறை முறை நெறிப் பொலிவும் ... உடைய ஒன்ருகும். எனவே, **‘இந்து’ என்ற சொல் இந்தியாவில் வாழும் எல்லா மதத்தினரையும் குறிக்கும் பொதுச் சொல்லாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது எம்மால்** (பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரர்). இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் மறுமலர்ச்சி பெற்றுச் சக சுக வாழ்வு (சக சுக வாழ்வு = சமத்துவச் சகோதரத்துவப் பொதுவுடமை = சித்தர் நெறி) வாழ வேண்டும். அதற்காக ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டது. ஆனால், இந்த இயக்கம் இலைமறை காயாகவே இருந்து வந்தது. இது முழுக்க முழுக்க ஒரு பண்பாட்டு நடவடிக்கைக் குழுவின் இயக்கமே. (This INDHU MARUMALARCHI IYAKKAM is a Cultural Activity Movement. And this is led by a Board of Divinators and Mystics.) இந்த இயக்கம் செயலளவில் விரிவு படுத்தப்படவும், விரைவு படுத்தப்படவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அம்முயற்சிகளின் எழுத்து வடிவங்களில் ஒன்றே இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை. (The Manifesto of the INDU MARUMALARCHI IYAKKAM is one of the written form of Renaissance Movement. And this will accelarate the speed of work and widen its range of working field.)

இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கையின் முன்னுரையே இந்துமதம் அழியுமா!?!?!? ... என்ற தலைப்பில் கட்டுரையாக

எழுதப்பட்டிருக்கின்றது. இக்கட்டுரை இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கையின் முதன்மையையும், மேன்மையையும், பயனேயும் சிறப்பாக விளக்குமென்று நம்புகிறேன்.

இந்துமதம் பதினெண்சித்தர்களால் ஓர் உணர்வுப் பூர்வமான மதமாகவும், அறிவுப்பூர்வமான மதமாகவும் நுட்பமாகப் படைக்கப்பட்டிருக்கின்றது. இதன் திட்பமும், நுட்பமும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக நிகழ்ந்திடும் எல்லாவகைத் தாக்குதல்களேயும் சமாளித்து வரும் நுட்பமுடையவையாகும். எனவே, **இந்த இருபதாம் நூற்ருண்டில் மட்டுமின்றி இனிவரும் நூற்ருண்டிலும் அறிவுப் பூர்வமாக எடுக்கப்படும் சமய, சமுதாய, அரசியல் முயற்சிகள் அனைத்தும் இந்துமதத்தை அணுவளவு கூட அசைக்க முடியாது**. எனவே இந்துமதத்தை, அதன் உரிமை வாரிசுகளுள் ஒருவஞன நான் உணர்வுப் பூர்வமாகவும், அறிவுப் பூர்வமாகவும் அப்பழுக்குகளே அகற்றி மறுமலர்ச்சி பெறுமாறு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். என்னேப் பின்பற்றி எண்ணற்ற அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் இம்மாபெரும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில் எவர் வேண்டுமாஞலும் எம்மோடு “இந்துமதம் தேவைதாஞ? இல்லேயா?” என்பது பற்றி வாதிக்க முன்வரலாம். இவர்கள் இந்துமதத்தின் இடத்தில் வேறு எதை? எப்படி? நிலேநிறுத்த விரும்புகிருர்கள்? அப்படியவர்கள் விரும்புவதில் என்ன நியாயம் இருக்கிறது? என்ன பயன் இருக்கிறது? என்பதையெல்லாம் எடுத்து விளக்கி விவாதம் புரிய வேண்டும். இவர்கள் விவாதமனேத்திற்கும் பதிலளிக்கக் காத்திருக்கிறேன் நான். எனது கடலோடிக் காடோடி நாடோடி வாழ்வு ஏட்டறிவும், பயிற்சிகளும், தேர்ச்சிகளும், முயற்சிகளின்

முதிர்ச்சிகளும் ஓர் மிகப் பெரிய, அரிய, சீரிய, நேரிய, இடையீடற்ற, நெடிய தெய்வீகப் பாரம்பரியத்தின் உரிமைகளேயும், பெருமைகளேயும் நிலேநாட்டிடும் மாபெரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்த ஈடுபாட்டின் வெற்றி தோல்வி தனிமனிதரின் வெற்றி தோல்வியாக இருக்காது, இருக்க முடியாது. எனவேதான், எல்லோரையும் கருத்துப் பரிமாற்ற விவாத அரங்குக்கு கனிவோடும், பணிவோடும், துணிவோடும் அழைக்கின்றேன். “அன்பே சிவம்” என்ற மாபெரும் உணர்வுப் பூர்வமான கடவுட் தத்துவத்தை கண்டுபிடித்த சித்தர் நெறியின் வளர்ந்த வடிவமாக இருக்கும் இந்துமதத்துக்காக வாதாடப் புறப்பட்டிருக்கிறேன் நான்.

இந்துமதத்தில் மடமையும், மூடத்தன்மையும், பிற்போக்குத் தன்மையும், ஏமாற்றும், எதேச்சாதிகாரமும், சுரண்டலும், முதலாளித்துவத் தன்மையும் உண்மையிலேயே இடம் பெற்றிடுகின்றனவா? அல்லது நீர்மேல் படியும் பாசிபோல் இவை தோன்றினவா? ... என்ற விவாதத்தைப் பகுத்தறிவுப் போக்கில் விஞ்ஞானச் சூழலில் நிகழ்த்திடுவோம் வாரீர்! வாரீர்!! வாரீர்!!! ... என்ற வேண்டுகோளே விடுத்து இம்முன்னுரையை நிறைவு செய்கிறேன்.

ஓம் திருச்சிற்றம்பலம்.

**அன்பே சிவம்!**

**அறிவே தெய்வம்!**

**கனிமொழியே பூசை!**

**மக்கட் தொண்டே வழிபாடு!**

**இரக்கமே நெய்வேத்தியம்!**

**ஆறுதல்மொழியே அருட்சினை! (அர்ச்சனை)**

**பயிரினங்களும் உயிரினங்களும் பரமனின் வடிவெனப் போற்றலே சமயவழி நிற்றல்!**

**அனைவரிடமும் அன்பு செலுத்தலே உண்மைப் பத்தி!**

**பிறரோடு கூடி வாழக் கற்பிப்பதே சமயம்!**

**சமுதாயத்தைக் கட்டுக்கோப்பாகக் கட்டிக் காப்பதே கடவுள் வழிபாடு!**

**நிம்மதியையும் நிறைவையும் தழைக்கச் செய்யும் பருவமழையே இறையுணர்வு!**

**மனிதனை மனிதனாகப் பண்படுத்துவதே மதம்!**

**உறவையும், உரிமையையும் உருவாக்கித் தருவதே சமயவாழ்வு!**

**தன்னம்பிக்கையை ஊட்டுவனவே சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகள்!**

**தளர்வுகளைத் தகர்ப்பனவே தேர்த் திருவிழாக்கள்!**

**இன்ப வெறிகளை அழகு நெறிகளாக ஆக்குவதே மத வாழ்வு!**

**அன்பு**

**சித்தர் கருவூரர்,**

**18-8-80.**

# இந்து இலக்கியக் கழக வெளியீடுகள்

**[கையெழுத்து நூல்களாக வெளிவந்தவை.]**

# The Indu Literature Society Publications.

**(Manuscript Publications)**

1. இந்துமதம் உலக முதல் மதம்.
2. இந்துமதம் வருங்கால உலக மதம்.
3. இந்துமதம் மானுட இனத்தின் உண்மை மதம்.
4. இந்துமதக் கடவுள்கள் வரலாற்று வீரர்களே.
5. இந்துமதக் கோயில்கள் வரலாற்றுப் பெட்டகங்களே.
6. இந்துமதம் கலைகளின் தாய்.
7. இந்துமதம் பகுத்தறிவு மதம்.
8. இந்துமதம் மனிதனைக் கடவுளாக்குகின்றது.
9. இந்துமத வழிபாட்டு நிலையங்கள் அருட்கேணிகளே.
10. இந்துமதம் உணர்வுப் பூர்வமானது.
11. இந்துமதப் புராண இதிகாசங்கள் அறிவுப் பூர்வமானவை.
12. இந்துமதப் பூசைமுறைகள் பகுத்தறிவுப் பூர்வமானவை.
13. இந்துமத நடைமுறைகள் ஒரு முழுமையான மத வரலாறு.
14. இந்துமத மறைகளும் மறையாந்தங்களும்.
15. இந்துமத முறைகளும் முறையாந்தங்களும்.
16. இந்துமத நெறிகளும் நெறியாந்தங்களும்.
17. இந்துமத வேதங்களும் வேதாந்தங்களும்.
18. இந்துமத ஆகமங்களும் மீமாம்சைகளும்.
19. இந்துமதமும் ஒன்பது தேய்கலைகளும்.

20. இந்துமதத் திருவாசகங்களும் குருவாசகங்களும்.
21. இந்துமதத் தேவாரங்களும் பாசுரங்களும்.
22. இந்துமதச் சாத்திறங்களும் தோத்திறங்களும்.
23. இந்துமத எந்திறங்களும் மந்திறங்களும்.
24. இந்துமத அருளாளர்களும் அடியார்களும்.
25. இந்துமதத்தில் சித்திநிலைகளும் முத்திநிலைகளும்.
26. இந்துமதமும் அறுபத்துநான்கு ஆயகலைகளும்.
27. இந்துமதமும் நாற்பத்தெட்டு அருட்கலைகளும்.
28. இந்துமதமும் ஒன்பது கடவுட்கலைகளும்.
29. இந்துமதமும் ஒன்பது தெய்வீகக்கலைகளும்.
30. இந்துமதமும் ஒன்பது நோய்க்கலைகளும்.
31. இந்துமதமும் இறவாமையும்.
32. இந்துமதமும் ஒன்பது பேய்க்கலைகளும்.
33. இந்துமதமும் பிறவாமையும்.
34. இந்துமதமும் உயிர்ப்பு நிலைகளும்.
35. இந்துமதமும் கணுநூல்களும்.
36. இந்துமதமும் வானநூல்களும்.

.... ....

விரிவஞ்சிப் பட்டியலை இத்துடன் நிறுத்துகிறோம். எண்ணற்ற கையெழுத்துப் படிவங்கள் உலகெங்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. விரைவில் இவையெல்லாம் அச்சு வடிவம் பெற திருவுள ஒப்புதலையும், குருவாணையையும் வேண்டித் தவம் கிடக்கும்,

**சித்தரடியான்கள்,**
**சித்தரடியாள்கள்,**
**சித்தரடியார்கள்.**

ஓம் திருச்சிற்றம்பலம்!

அன்பே சிவம்! கனிவே கடவுள்!

அமைதியே ஆண்டவன்! இன்பமே இறைவன்!

நிம்மதியே நிறையருளாளன்!

தெம்பே தெய்வம்! பணிவே பரம்பொருள்!

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. கையெழுத்து நூலாக வெளியிடுபவர் சித்தரடியான் திரு சோ.இராமகிருட்டிணன் என்று நகலில் ஆரம்பத்தில் குறிக்கப்பட்டுள்ளது.//**

# குருதேவரின் அரிய திட்டம்

சென்னை-39,
31.5.1981.

அருள்மிகு தேவி பிடாரி அம்மன் சன்னிதானம் திரு துரைசாமி அவர்களுக்கு,

துணைக் குருவாணை ஒலைநாயகம், சங்காத்தம்மன் சன்னிதானம், மு.பெருமாள் (I பிளாட் நெ. 1665, 15வது மேற்கு குறுக்குச் சாலை, அசோக் லேலண்டு நகர், சென்னை-39) வரைவது.

பேரார்வம் உடைய இனிய நண்ப! தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் தாங்கள் பேராற்றல் உடைய நண்பராக வளர வாழ்த்துகின்றேன். நமது குருதேவரும் அவரைச் சார்ந்த நாமும் ஒரு புது யுகத்தின் வரலாறாக வளர்ந்து வருகின்றோம். அதிலும் கற்பனைகளும், கதைகளும், பொய்களும், புளுகுகளும், அறியாமைகளும், மடமைகளும், புராண இதிகாசங்களும் காடுபோல் மண்டிக் கிடக்கக் கூடிய மதத் துறையில் நாம் புதிய வரலாறாக உருவாகி வருகிறோம். அதனால் நாம் எவ்வளவு பெரிய கலைக் கருவூலத்தை உருவாக்கினாலும் அது இந்தக் காட்டுக்குள்தான் மறைந்து கிடக்கும். அதாவது சொந்த நாட்டாரே கூட நம்மைப் பற்றி தெரிந்து கொள்ள முடியாமல் போய்விடுவோம்.

அதனால்தான் ஒவ்வொரு சித்தரடியானும் தனக்கு வரக்கூடிய அஞ்சலின் நகல்களை உடனுக்குடன் நகல் எடுத்து யாகத்திறமுறைக்கும் நாயகங்கள் [[1]சோ.இராமகிருட்டிணன், 6, 4வது குறுக்குத் தெரு, பொன்னகரம், பிராட்வே, மதுரை-10; [2]வீரமாகாளி சன்னிதானம்; [3]திருச்சி REC; [4]கருமாரியம்மன் சன்னிதானம், ந.சண்முகம்,

C/O. முருகேசன், 24, புத்தகரம் கிராமம், இலட்சுமிபுரம் P.O., சென்னை-99, PIN:600099; [5]குருதேவர்; [6]துணைக் குருவாணை ஓலைநாயகம் மு.பெருமாள், பிளாட்நெம்பர். 1665, 15வது மேற்குக் குறுக்குத் தெரு, அசோக் லேலண்டு நகர், சென்னை-39, 600039] உடனுக்குடன் நகல் எடுத்து அனுப்பிடல் வேண்டும். இதனால் நமது இயக்கத்தின் மூத்தவர்கள் நன்கு புரிந்து அவரவர்க்குத் தேவையான அருளை, அறிவுரையை, செயல்திட்டங்களைத் தொடர்ந்து வழங்க முடியும்.

பல்லாயிரக்கணக்கான அடியான்களையும், அடியார்களையும், அடியாள்களையும் உருவாக்கி உலவ விட்டுவிட்ட பின்னரே நமது குருதேவர் தமது தாயகமான தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக நிர்வாக நிறுவன ஒழுங்கமைப்பும், கட்டுப்பாடும் உடைய இயக்கத்தை உருவாக்கி வருகிறார்கள். ஏனென்றால், உலகம் முழுவதும் உருவாகப் போகும் அருளாட்சிக்குத் தமிழகம்தான் தலைநகரமாக இருக்கும்.

இதை இன்னொரு விதமாகச் சொல்ல வேண்டுமென்றால் **'உலகெங்கும் உருவாக்கப் போகும் அருட்பண்ணைகளுக்குத் தேவையான விதைகளையும், நாற்றுக்களையும், கன்றுகளையும்; தமிழ்நாட்டை நாற்றங்காலாக்கித், தமிழ்மொழியை நீராக்கித், தமிழர்களை உழவர்களாக்கி விதைப் பண்ணையை என்றென்றும் நிலைபேறு பெறச் செய்வது'**தான் நமது குருதேவரின் அரிய திட்டம். இத்திட்டத்தை நம் காலத்தில் சில நூறு பேர்களாவது முழுமையாகத் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, ஒப்புக் கொண்டு செயலாக்கிட்டால்தான்; விண்ணையும் மண்ணையும் இணைத்த பெருமை, மானுடரை கடவுளாக்கிய பெருமை, மனித இனத்தைப் புனிதப்படுத்திய பெருமை நம் காலத்துக் கிடைக்கும்.

குருதேவர் தனியொரு மனிதராக இம்மாபெரும் முயற்சியை செய்யவில்லை. அனைவரும் வாரீர், வாரீர் என அழைத்து உடனடியாக நேரடியான அருளையும், அவரவர் தாங்களாக அருளை விளைவித்துக்

கொள்ளும் கலைகளையும், பிற உண்மைகளையும் எந்தவித வேறுபாடின்றி எந்நேரமும் வாரிவாரி வழங்கிக் கொண்டே இருக்கிறார். வாங்குகிறவர்களில் பெரும்பாலானவர்கள் அதைத் தாங்க மாட்டாதவர்களாகவும், அதைப் பேணத் தெரியாதவர்களாகவும், காத்து வளர்க்க முடியாதவர்களாகவுமே இருந்து வருகிறார்கள். இருந்த போதிலும் அவர் இரவு பகலாக சிந்தித்தும், எண்ணியும், உணர்ந்தும், ஏடுகளைப் புரட்டியும், தவத்தில் ஆழ்ந்தும், பூசைகளைச் செய்தும், ... பிறருக்கு எப்படி எப்படியெல்லாம் அருள் வழங்க முடியும் என்ற செயல்பாட்டிலேயே ... ... ...

*[கடிதம் முற்றுப் பெறவில்லை. நகல் முழுமையாகக் கிடைக்கவில்லை.]*

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியான் திரு மு.பெருமாள் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# சித்தர்களின் சோதிடக் கலை

மனித வாழ்வில் முன்னெச்சரிக்கையுடன் துன்பங்களைத் தவிர்த்துக் கொள்ளவும், இன்பங்களைப் பெருமளவு தேடித் துய்க்கவும், வாழ்வியலுக்கு உரிய 1. மென்மை, 2. அன்பு, 3. இனிமை, 4. கனிவு, 5. நளினம், 6. குழைவு, 7. நெளிவு, 8. பணிவு, 9. பற்று, 10. பாசம், 11. உறவு நாடல், 12. நட்புச் செய்தல், 13. தோழமை, 14. பெரியாரைப் பேணல், 15. மன்னித்தல், 16. மறத்தல், 17. அருளல், 18. அடைக்கலம் அளித்தல், 19. வீரம், 20. தீரம், 21. உரம், 22. அமைதி, 23. அடக்கம், 24. நிம்மதி, 25. நிறைவு, 26. பொறுப்பு, 27. பொறுமை எனும் 'விண்மீன் நிலைப் பண்புகள் இருபத்தேழு'ம் பெற்றிடவுமே சோதிடக் கலைகள் பல கண்டுபிடிக்கப்பட்டன பதினெண்சித்தர்களால்:-

I. பிறப்பியல் [சாதகம்], II. வரியியல் [கைரேகை], III. எண்ணியல், IV. கனுவியல், V. பெயரியல், VI. தொடுகுறி, VII. புள்ளியியல், VIII. பல்லியியல், IX. நிமித்திகம், X. விரிச்சி, XI. ஓச்சு, XII. கட்டு, XIII. முறி, XIV. அங்கவியல் [உறுப்பிலக்கணம்], XV. மனையியல் [மனையடி சாத்திறம்], XVI. சரம், XVII. ஏடு பார்த்தல், XVIII. நாடி சோதிடம், ...... என்று (64) அறுபத்து நான்கு வகையான சோதிடக் கலைகள் கண்டுபிடிக்கப்பட்டும் .... இன்று இப்பதினெட்டுதான் வழக்கில் இருக்கின்றன.

இவற்றின் மூலம் முற்பிறப்பு; மறுபிறப்பு; இப்பிறப்பு = இல்லறம் = மனைவி கணவன் நிலை; உயிர், ஆவி, ஆன்மா = திரு, குரு, கரு = ஊழ்வினை, வினை, விதி; உடல் = நோய், பேய், நட்பு, பகை; குடும்பம் = பெற்றோர், உடன்பிறப்பு, உறவு; தொழில் = கல்வி, கலை; செல்வம் = பொருள், அருள், அதிகாரம், ஆள்வலிமை, சொல்வளம்; நடப்பு நிலை விளக்கம்; வருங்கால அறிவுரை = பரிகாரம் எனும் பத்து வகையான செய்திகள் கணிக்கப்படும்.

(ஒப்பம்)

**ஞாலகுரு, குருமகா சன்னிதானம், சித்தர் கருவூரூர்,**

7.10.1972.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்து நகலாக இருந்தது.//**

**“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**

**- குருபாரம்பரிய வாசகம்.**






தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

இந்து என்ற சொல் இந்தியாவில் வாழும் எல்லா மதத்தினரையும் குறிக்கும் பொதுச் சொல்லாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார் ஆகிய எம்மால்.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org

https://gurudevar.in https://gurudevar.org

https://induism.org Email: indhuism@gmail.com